In the Court of the Principal District & Sessions Judge, Thoothukudi
Case No : MCOP.100/2024
Deposition of PW.2
****

Name திரு.ஹரிஹரன்

Father's Name

Village

Taluk

Calling

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 21st day of August 2026.

**முதல் விசாரணை :**

நான் இம்மனுவில் சாட்சி ஆவேன். நான் என்னுடைய சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை அனைத்தும் நான் சொல்லி எனது வழக்குரைஞரால் தயாரிக்கப்பட்டதாகும். அவற்றை நான் படித்து பார்த்து கையொப்பம் இட்டுள்ளேன்.

**குறுக்கு விசாரணை (2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரர்கள் எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆமாம். விபத்து சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளிக்க வந்துள்ள நான் காவல் நிலையத்தில் இது குறித்து புகார் கொடுக்க சென்றேனா என்றால் இல்லை. விபத்து சம்பவம் எப்போது எத்தனை மணிக்கு நடந்தது என்றால் ஜுன் மாதம் 2024 ம் வருடம், மதியம் 2.45 மணிக்கு நடந்தது. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், சாட்சிகள் சொன்னதன்பேரிலும் அந்த நாளையும் நேரத்தையும் குறிப்பிட்டு நிரூபண வாக்குமூலத்தில் பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு அதிகப்படியாக இழப்பீடு கிடைக்க வேண்டுமென்பதற்காக பார்க்காத சம்பவத்தை நான் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல

S SUBA DEVI Digitally signed by S SUBA DEVI Date: 2026.08.21 18:46:31 +0530

என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

S SUBA DEVI

Digitally signed by S SUBA DEVI
Date: 2026.08.21 18:46:36 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**தூத்துக்குடி.**